# முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண். 774 /2015

வா.சா.1 **செல்வராஜ்**

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி:-**

நான் வழக்குரையில் ராமசாமிகுமாரர் சுப்பராயகவுண்டர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதலில் தாக்கல் செய்த வழக்குரையின் விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை பத்தி 4 ல் சுப்பராயகவுண்டர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த போது ராமசாமிகவுண்டர் மகள் பெரியபாப்பாயை தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து இல்லாமல் ராமசாமிகவுண்டருக்கு இன்னும் வேறு பல சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. அதை பொறுத்து கடந்த 18.11.1997 ம் வருடத்தில் ராமசாமிகவுண்டரின் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி சொத்தை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பகுதி பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு என்பதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை பொறுத்து 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் தெரிவித்தும், நான் மேற்படி சொத்துக்களை சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ராமசாமிகவுண்டரிடமிருந்து சொத்துக்களை கிரையம் பெற்றவர்களை இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்கள் என்றால் மேற்படி விபரம் தெரியும். ராமசாமிகவுண்டரிடமிருந்து சொத்துக்களை யாரும் கிரையம் வாங்கவில்லை.

சுப்பராயகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் அவரது மகன்கள் விற்பனை செய்யவில்லை.

எதிர்வழக்குரைக்கு எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் உரையின் விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த பதில் வழக்குரையில் கடந்த 18.11.1997 வருடத்திய பாகப்பிரிவினை பத்திரம் விபரம் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 8ம் அயிட்ட சொத்தை ஒரு சிவக்குமார் என்பவர் கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்று நான் தாக்கல் செய்த பதில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பதில் வழக்குரையில் உள்ள விபரங்கள் எங்களால் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. சிவக்குமார் கிரையம் பெற்றது சம்பந்தமாக நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சிவக்குமார் கிரையமே பெறவில்லை.

பதில் வழக்குரையில் என் சகோதரர் தான் கையெழுத்து போட்டு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் முதலில் தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கும், பின்னர் திருத்தப்பாடு செய்து தாக்கல் செய்த வழக்குரைக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் நாங்களோ, எங்கள் குடும்பத்தினரோ சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர இன்னும் வேறு சொத்துக்கள் ராமசாமிகவுண்டருக்கு உள்ளது என்றும், அந்த சொத்துக்களில் இந்த வழக்கில் காட்டாமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சுப்பராயகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தான் சுப்பராய கவுண்டரின் வாரிசுகள் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நாங்கள் சுப்பராயகவுண்டரின் வாரிசுகளுடன் கூட்டு சேர்ந்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தான் 2 முதல் 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொறுத்து நடவடிக்கை எடுக்கவில்லை

என்றால் சரியல்ல. 1997 ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்ட விபரத்தை இந்த வழக்கில் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் 1997 வருடத்திய பாகப்பிரிவினை பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த வழக்குரையின் அடிப்படையிலேயே எங்களுக்கு பாகம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. கூட்டுசுவாதீனத்தில் இல்லாத நிலையில் நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் அவஎண்.432/2014 வழக்கின் தீர்ப்பு செல்லாது என்று சொல்லவும் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

எங்களுக்கு வழக்கின் விபரங்கள் முழுமையாக தெரியாது என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அடிப்படையிலேயே பங்கு கிடைக்காது என்றால் சரியல்ல. எங்களது வழக்கு பல்வேறு சங்கதிகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**